**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | STC – 137–2024 |
| Deposition of Witness | : | PW– 1 |
| Name | : | அனுசியா தேவி |
| Husband Name | : | தாமரைக்கண்ணன் |
| Village | : | வெள்ளகோவில் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 47 |

Accused absent. Crpc 317 petition filed.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 12.09.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது வெள்ளகோவிலில் குடியிருந்து வருகிறேன். வெள்ளகோவிலில் உள்ள பாலா மெட்ரிக் பள்ளியில் எனது மகள் தன்விஸ்ரீ மற்றும் மகன் ஹரன் பிரனவ் ஆகியோர்கள் படித்து வருகிறார்கள். கடந்த 10.08.2023 ஆம் தேதியன்று மாலை 4.30 மணியளவில் பள்ளிக்கு சென்று எனக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் எனது மகன் மற்றும் மகள் ஆகியோரை பின்னால் அமர வைத்துக்கொண்டு பள்ளியில் இருந்து வீட்டிற்கு செல்வதற்காக வலது புறமாக திருச்சி – காங்கேயம் ரோட்டிற்கு திரும்பி கிழபுறமாக செல்லும்போது எங்களுக்கு பின்னால் வந்த கோவை – திருச்சி செல்லும் ஏசி பேருந்து வேகமாக வந்து பின்னால் எங்கள் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. அந்த விபத்தில் எனக்கு வலது பாதத்தில் எலும்பு முறிவு ஏற்பட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. பின்னர் தலை, கை, கால், முதுகு ஆகிய இடங்களில் அடிப்பட்டிருந்தது. எனது மகன் மற்றும் மகளுக்கு கை, கால், முகத்தில் சிராய்ப்பு காயங்கள் ஏற்பட்டிருந்தது. சம்பவ இடத்தில் நான் மயக்கமானேன். சம்பவ இட அருகில் இருந்த நபர்கள் ஆம்புலன்ஸிற்கு தகவல் சொல்லி வரவழைத்து என்னை சிகிச்சைக்காக கோவை கங்கா அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். என்னிடம் காட்டப்படும் வாக்குமூல புகார் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த வாக்குமூல புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரியை அடையாளம் காட்டுவதற்காக அரசு தரப்பில் முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2025.09.12 19:37:35 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்